சீனாவிற்கு வந்துள்ள இந்தியர்களில், காலம் கடந்து தங்குபவர்களை பிடித்து வைக்கப்பட்டுள்ள விவரம், மற்றும் சுற்றுலா / வணிக விசாவில் வந்து வேலை பார்ப்பவர்கள் விவரம் ஆகியவை சீனாவில் உள்ள இந்திய தூதரகம் மற்றும் இதர தூதரக அதிகாரிகளுக்கு தெரியும். இந்தியாவில் உள்ள முகவர்கள் (ஏஜென்டுகள்), இந்திய குடிமக்களை, குன்மிங், ஹாங்காங் மற்றும் மாகோ வழியாக சீனாவிற்கு அழைத்துவந்து அவர்களை கைவிட்டுவிடுகின்றனர்.

2) இந்திய குடிமக்களை சீனாவில் வேலைக்கு அமர்த்த இந்திய தூதரகம் எந்த ஒரு முகவரையோ (ஏஜென்டு) அல்லது நிறுவனத்தையோ (ஏஜென்சி) அங்கீகரிக்கவில்லை.

3) சீனாவிற்கு வருகை தரவிருக்கும் இந்திய குடிமக்கள் அனைவரும், கீழ்கண்ட அறிவுரைகளை கவனத்தில் வைத்துக்கொள்ளுமாறு இத்தூதரகம் கேட்டுக்கொள்கிறது.

- சீனாவில் உங்களுக்கு வேலை வழங்கப்படுவதாக கூறும் எந்த ஒரு முகவர்களையும் (ஏஜென்டுகளையும்) நம்பவேண்டாம். எந்த ஒரு முகவர்களுக்கும், இந்திய குடிமக்களை சீனாவிற்கு வேலை பார்க்க அழைத்து வர அங்கீகாரம் வழங்கப்படவில்லை.
- சுற்றுலா மற்றும் வியாபார விசா மூலம் சீனாவில் எந்தவொரு வேலைவாய்ப்பையும் ஒப்புக்கொள்ளவேண்டாம்.
- சுற்றுலா மற்றும் வியாபார விசா மூலம் சீனாவில் வேலை வாங்கித்தர உத்திரவாதம் கொடுக்கும் முகவர்கள் கண்டிப்பாக உங்களை ஏமாற்றுவதற்கு வாய்ப்புள்ளது.
- நீங்கள் சீனாவில் குறிப்பிட்ட இடத்தில் வேலை பார்க்க விசா வைத்திருந்தால், அந்த விசாவை வைத்து சீனாவில் வேறு எந்த நகரத்திலும் வேலை பார்க்க முடியாது.
- விசாவின் விதிமுறைகளை மீறவோ அல்லது வேலை பாாக்கும் இடத்தை மாற்றவோ முயற்சிக்கவேண்டாம். சீன தூதரகம், வேலை வாய்ப்புக்கான விசா அனுமதியை, ஒரு குறிப்பிட்ட இடத்திற்கும்/பிராந்தியத்திற்கும் மற்றும் குறிப்பிட்ட நிறுவனத்தில் வேலை பார்ப்பதற்கும் மட்டுமே வழங்குகிறது.
- வேலை வாய்புக்கான ஆவணங்களை ஆங்கிலம் மற்றும் சீன மொழில் பெற்றுக்கொள்ளவும்.
- சீனாவிற்கு வந்தவுடன், இந்திய தூதரகம் அல்லது தூதரகங்களில் உடனே பதிவு செய்து கொள்ளவும்.